**அகுரஸ்ஸ பிரதேச சபை**
**மாதரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆம் திகதியும் முன்னைய ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 25 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அகுரஸ்ஸ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

கணக்குகள் தயாரிக்கும் போது கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் கிடைக்கப்பெற்றிருந்த டிபர் வண்டியின் பெறுமதி ரூபா 1,609,602 ஆல் குறைவாகவும் கைதொழில் கடண் கொடுனர் மீதி ரூபா 19,923,140 ஆல் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 1992 ஆம் ஆண்டு சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த கிரயம் ரூபா 625,000 ஆன கப் வண்டியின் பெறுமதி மீளாய்வாண்டிலும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டுக்காக கிடைத்திருந்த ரூபா 1,414,104 ஆன முத்திறை கட்டணம் மீளாய்வாண்டின் பெறுவனவாக கணக்கிடப்பட்டமையால் ஆண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய முத்திறை கட்டணம் சமமான பெறுமானத்தால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளில் கூட்டுத்தொகை மற்றும் அது தொடர்பான பட்டியல்/ பட்டோலைகளில் காட்டப்பட்ட மீதிகள் இடையில் கூட்டுத்தொகை ரூபா 216,045 ஆன சமமின்மை அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 29,879, 056 வான நாநாவித கடன்பட்டோர் மீதிக்குல் 03 வருடம் விஞ்சியிருந்த ரூபா 3,374,182 வான 09 மீதிகள் உள்ளடங்கப்பட்டிருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 35,132,767 தொகையான காணி மற்றும் கட்டிடம் மீதான முறையான மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்ட காணி மற்றும் கட்டிடப் பதிவேடும் உரிமைக்கான உறுதியும், ரூபா 59,171,299 ஆன மோட்டார் வண்டி மற்றும் மாட்டுவண்டி தொடர்பான செம்மையாக்கப்பட்ட பெறுமதி உள்ளடங்கிய பட்டோளையும், ரூபா 7,968,314 ஆன கடன் படுனர் மீதி மற்றும் ரூபா 8,234,778 ஆன கைதொழில் கடன் கொடுத்தோர் மீதி தொடர்பாக கடன் படுனர் மற்றும் கடன் கொடுனர் பதிவேடுகளும், சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமானம் | |
| (i) நிதிப்பிரமானம் 570 மற்றும் 571 | மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,828,171 வான காலம் கடந்த வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமானம் 1645 மற்றும் 1646 | சபைக்கு உரித்தான 21 வண்டிகள் தொடர்பான தின ஓட்டக்குறிப்பு மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் விஞ்சிய வருமானம் ரூபா 8,752,279 ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் விஞ்சிய வருமானம் ரூபா 14,315,636 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,563,357 ஆன வீழ்ச்சி காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் செலவில் 12 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன், மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 85 சதவீத அளவு மொத்த மீண்டுவரும் செலவு நிலவியதனால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவு உயர் பெருமானத்தை எடுத்து இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம், வருமான உதவியும் சுய சம்பாதிப்பு வருமானமும் மற்றும் மொத்த மீண்டு வரும் செலவு மீதான சுருக்கமான விபரமொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 58,160,874 | 27,705,313 | 30,455,561 | 49,408,595 | (18,953,034) |
| 2014 | 52,766,032 | 19,456,106 | 33,309,926 | 38,483,396 | (5,173,470) |
| 2013 | 46,321,753 | 17,686,900 | 28,634,853 | 36,638,432 | (8,003,579) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் சபையில் வருமான உதவிகளில் வளர்ச்சியொன்று நிலவிய போதும், முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக சுய சம்பாதிப்பு வருமானத்தில் ரூபா 2,854,365 ஆன குறைவு காட்டப்பட்டன.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் கனிசமான பெருமானத்தில் வளர்ச்சி அடைந்து இருந்த போதிலும் அந் நிலமையை குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சி மூன்று வருடங்களிலும் கனிசமான தொகையினால் மீண்டு வரும் செலவு அதிகரித்து இருந்தது. எனவும், வருமான உதவி கிடைக்காவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள்நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை உறுவாகியுள்ளது எனவும் காட்டப்பட்டன.

(இ) **தேறிய சொத்து**

முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் தேறிய சொத்து ரூபா 21,272,999 ஆல் அல்லது 14 சதவீதத்தால் குறைந்து இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வரி மற்றும் வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

**(அ)** ஆரம்ப நிலுவையின் 28 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலில் 80 சதவீதம் ஆண்டுக்குள் அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவை வரி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டிற்காக ஏக்கர் வரி பற்றுச்சீட்டிடல் செய்து இருக்கவில்லாததுடன், ஆரம்ப நிலுவையின் 19 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவையின் 17 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலில் 75 சதவீதம் அறவிடப்பட்டிருந்த போதிலும், நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடைஅறை வாடகை

தெற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 நவம்பர் 07 ஆம் திகதிய தபபா/பாபாகோ/2010/01 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பங்கம வீதியில் அமைந்துல்ல பொது வியாபார கட்டிடத்தொகுதியில் 51 கடைஅறைகளின் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லா போதிலும், 2007 ஆண்டு முதல் 07 கடைஅறைகள் குத்தகைக்கு வழங்கப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,188,000 ஆன வருமானம் சபைக்கு கிடைக்கப்பெறாமல் இருந்தது.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,189,790 மற்றும் முத்திறை கட்டணமாக ரூபா 13,995,000 பெற வேண்டியதாக இருந்தது.

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

### 3.1.1 பதவியணியினர் முகாமை

ஆளணி திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட எண்னிக்கையை விஞ்சி ஈடுபடுத்தப்பட்டிருந்த 05 ஊழியர்களின் பதவியை முறையாக்கிக் கொள்வதற்கு, மேலும் 04 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிறப்பிக்கொள்ள மீளாய்வாண்டின் இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 ஊழியர் கடன்**

10 ஊழியர்களிடமிருந்து 10 வருடங்களுக்கு முன் அறவிடவேண்டிய மொத்தம் ரூபா 54,133 ஆன நிலுவை கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சிக்கணமற்ற கொடுக்கல் வாங்கள்**

புது அலுவலக கட்டிடமொன்று நிர்மானிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தில் இருந்த கடைஅறைகளை வேறொரு இடத்தில் நிர்மாணிப்பதற்கு செலவான ரூபா 1,140,370 பயனற்றதாக இருந்தது.

**3.4 கழிவு பொருள் முகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2002 ஆம் ஆண்டு முதல் குப்பை வரி அறவிட உப சட்டயாப்பு அமுலாக்கப்பட்டிருந்த போதும் குப்பை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குப்பை இடப்படும் தனியார் காணியை சபைக்கு சுவீகரிக்க அல்லது சுற்றாடல் அனுமதி பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மருத்துவ மனை, தொழிற்சாலை, மாடி வீட்டு தொகுதி மற்றும் மாமிச விற்பனை நிலயம் போன்றவற்றினால் ஆண்டிற்கு 110 டொன் அளவு குப்பைகள் இடப்பட்ட போதும் அவற்றிற்காக வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 செலவின விடயங்களின் ரூபா 11,752,201 தொகையான சேமிப்பும், 02 செலவின விடயங்களின் எல்லை விஞ்சிய ரூபா 1,220,661 தொகையான செலவும், 06 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 6,310,785 வும், பாதீட்டு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விஞ்சிய வருமான விடயமொன்றின் ரூபா 4,338,169 ஆன அறவீடுகள் போன்ற காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானம் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளுராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும் உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 427,992 ஆன பணம் செலுத்தப்பட்டிருந்தன.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு**

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 தீர்க்கப்படாத மற்றும் விடையளிக்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் காட்டப்பட்டதன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் 28 ன் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்குகளில் பதிவிட இணங்கிய போதிலும் , அதற்கு இணங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்